சென்னை வடகிழக்கு மாவட்டம் 28 வது வார்டை சார்ந்த அ.தி.மு.க. மற்றும் த.வெ.க. கட்சியினர் அக்கட்சிகளில் இருந்து விலகி சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் எஸ். கனிமொழி சுரேஷ், 28 வது வார்டு துணைச் செயலாளர் டி.ஆர்.செங்குட்டுவன், ஆ.சசிகுமார், வட்டப் பிரதிநிதி எஸ்.ஆரோக்கியராஜ், மூலக்கடை தொ.மு.ச. ஆட்டோ சங்க நிர்வாகிகள் மணிகண்டன், ஏஞ்சல் ராஜி, நாகராஜ், ராஜேஷ், சதிஷ், கட்டனி பிரபு, கேரல் மார்க்ஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சியில்

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 11.12 சதவிகிதமாக உயர்ந்துள்ளது!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு!

திருவள்ளூர் செப் 30

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் தமிழ் நாட்டை தலைகுனிய விடமாட்டேன் ஒரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் நசரத் பேட்டையில் நடைபெற்றது இதில் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமை வகித்தார் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் வரவேற்புரையற்றினார்

இக்கூட்டத்தில் தமிழ் நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர்

கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ, திராவிட இயக்கம் சிந்தனையாளர் நாஞ்சில் சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு சிறப்புரையற்றினார்கள்

அப்போது பேசிய அமைச்சர் தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு உரிமை தொகை தமிழக அரசு வழங்கி வருகிறது. பேருந்தில் மகளிருக்கு விடியல் பயணம் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறோம். 18 லட்சம் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தி நமது முதல்வர் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். தமிழகம் என்ற நாடு தனித்தமிழ் நாடாக இருந்திருக்கு மேயானால் அந்த நாடு உலகத்திலேயே 18வது பொருளாதார வல்லரசாக இருந்திருக்கும் என பிரபல ஆய்வறிக்கை வல் லுநர் தெரிவித்துள்ளார். தமிழகத்தின் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்

தலைமையிலான ஆட்சியில் பொருளாதார வளர்ச்சி 11.12 சதவீதமாக உயர்ந்துள்ளது. இவ்வாறு பேசினார்.

இந்நிகழ்ச்சி முடிவில் 1.நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ் நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

2.நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ் நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன். தமிழ் நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

3.நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய நிதிக்காகப் போராடுவேன். ஒருபோதும் தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

4.நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

5.நான், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் உறுதிமொழி வசிக்க தொடர்ந்து கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர் மற்றும் மற்றும் கழக நிர்வாகிகள் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர் முடிவில் கிளைச் செயலாளர்கள் ஆர்.தேவதாஸ், டி. தருமன், ஜெயராமன், ந.ச.பாலா நன்றி கூறினார்கள்.

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மதுரவாயல் தெற்கு - 153வது வார்டில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

சாந்தி ராமலிங்கம் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, செப். 30-

முதல்வர் அவர்கள் சிறப்பான மக்கள் வசிக்கக்கூடிய இல்லங்களுக்கு தேடி உங்களுடன் ஸ்டாலின் என்கிற நிகழ்ச்சி பெருநகர சென்னை மாநகராட்சி 153 வது வார்டில் உங்களுடன் ஸ்டாலின் என்கிற மகத்தான திட்டம் இரண்டாவது முறையாக PJN மஹால் உதய நகரில் இன்று காலை 30.9.2025 காலை 9 மணி அளவில் நடைபெற இருப்பதால் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை ஏற்று நமது மாமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி இராமலிங்கம் முன்னிலை யில் நமது மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி மற்றும் நமது வளசரவாக்கம் மண்டல குழு தலைவர் சகோதரர் வே.நொளம்பூர் ராஜன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சி தொடங்கி உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற இருக்கிறது.

இந்நிகழ்ச்சிக்கு நமது வட்டக் கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் நகர் நலச் சங்க பெரியோர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர் அனைவரும் வாரீர் கலந்து கொண்டு பயன் பெறுவீர்.

இவ்வாறு 153 வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாந்தி ராமலிங்கம் அறிவித்துள்ளார்.

தீரர் ஜெ.அன்பழகன் மேம்பாலம் - முதல்வர் திறந்து வைக்கிறார்:

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையினருக்கு - ச.சண்முகநாதன் வேண்டுகோள்!

சென்னை, செப்.30

சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னையம்பதியில் - தியாகராயநகர் உஸ்மான் சாலையில், சைதாப்பேட்டை கோடம்பாக்கம் நுங்கம்பாக்கம் பகுதிகளுக்கு வாகனம் விரைந்து செல்லும் வகையில் ரூ.162/ கோடி மதிப்பீட்டில், உருவாக்கப்பட்டுள்ள இரும்பு மேம்பாலத்திற்கு, கொரோனா போராளி நினைவில் வாழும் தீரர். ஜெ.அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களின் பெயரைச் சூட்டி இன்று (30.09.2025) காலை 11 மணியளவில், முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கவிருக்கும் இம் மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்கச் சீரிய விழாவில், துணை முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், மேயர் அவர்களும், துணை மேயர் அவர்களும் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர் பெருமக்களும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்களும், தமிழ் நாடு அரசின் உயர் அதிகாரிகளும், அலுவலர்களும், கழகத்தின் முன்னோடி நிர்வாகிகளும் கலந்து கொள்ளும் இந்நிகழ்ச்சியில், சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின், மாவட்ட பகுதி நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் ச. சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி தி.மு.க. சார்பில்

வட்டச் செயலாளர்கள் - பாகப் பொறுப்பாளர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிவிப்பு!

சென்னை, செப்.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதிக் கழகம் சார்பில் வட்டச் செயலாளர்கள்,பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது என பகுதிக் கழக செயலாளர் தி.மு. தனியரசு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டலக்குழுதலைவர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் (2.10.2025 வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதிக் கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் ஆர். சி.ஆசைதம்பி தலைமையில் வட்ட செயலாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர் மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் தியாகராயர் நகர் எஸ்.மோகன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்தில் பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், பாக பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதி கழக செயலாளர் தி.மு.தனியரசு கேட்டுக் கொண்டுள்ளார்.

தீரர் ஜெ. அன்பழகன் பெயரில் மேம்பாலம்!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில்! நந்தனம் கி.மதி வேண்டுகோள்!

சென்னை, செப்.30-

தென் சென்னையின் தீரர், மறைந்த மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், ஜெ. அன்பழகன் திருப்பெயரால் அமையும் பிரம்மாண்ட மேம்பாலத்தை திறக்க வருகை தரவுள்ள கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில், (30.09.2025 செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில் வரவேற்பளிக்கப்படுகிறது.

எனவே மயிலை மேற்கு பகுதியைச் சார்ந்த மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டக்கழகச்செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, பாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள் (BLA2, BLC, BDA,BYO)அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என மயிலை மேற்குப் பகுதி கழகச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் தெற்கு ஒன்றியத்துக்குட்பட்ட பல்வேறு பகுதியிலிருந்து மாற்று கட்சியினர் ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.சத்தியவேலு ஏற்பாட்டில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

முன்னாள் மாவட்டச் செயலாளர் ஜெ. அன்பழகன் பெயரில்

மேம்பாலம் திறக்க வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மயிலை த. வேலு எம்.எல்.ஏ. தலைமையில்! எஸ்.முரளி வேண்டுகோள்!

சென்னை, செப்.30

தென் சென்னையின் தீரர், மறைந்த மாவட்டக் கழக முன்னாள் செயலாளர், ஜெ. அன்பழகன் திருப்பெயரால் அமையும் பிரம்மாண்ட மேம்பாலத்தை திறக்க வருகை தரவுள்ள கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை தென்மேற்கு மாவட்டக் கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமையில், இன்று (30.09.2025 செவ்வாய்க்கிழமை) காலை 11 மணி அளவில் வரவேற்பளிக்கப்படுகிறது.

எனவே மயிலை கிழக்கு பகுதியைச் சார்ந்த மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்டக்கழகச்செயலாளர் , மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட, பாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள் (BLA2, BLC, BDO) அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என மயிலை கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ். முரளி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள மிகவும் பழமை வாய்ந்த ஆரசார மருத்துவமனையில், ரூ.27 கோடி மதிப்பீட்டில் புதிதாக 300 படுக்கைகள் கட்டுவதற்கான பணிகள் 95 சதவிகித நிறைவடைந்த நிலையில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, மருத்துவர் கண்காணிப்பாளர் சாந்தி மற்றும் மருத்துவ குழுவினர், பொதுப்பணித் துறை அதிகாரிகள், மின்வாரிய அதிகாரிகளுடன் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, டிசம்பர் 15க்குள் மீதமிருக்கும் பணிகளை முழுமையாக நிறைவுசெய்ய, தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். உடன் மருத்துவர்கள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட முன்னாள் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட துணை அமைப்பாளர் பு.பவளவண்ணனின் பேரன் ஒய்.தருண் முதல் பிறந்தநாள் விழாவில் தலைமை கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், 88வது வட்ட செயலாளர் சீனிவாசன், டாக்டர். எஸ்.புகழேந்தி, செங்கோட்டவன், பு.மலர் வண்ணன், பாரதியன், கலைச்செல்வன், தீலிப்குமார், புலிதேவன், சாலமன் தாம்சன். சுபாஷ், ஹேமந்த் சந்துரு டி.யுவராஜ், ஒய்.பிரியா உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் மேயர் ஆர்.பிரியா தலைமையில் நேற்று (29.09.2025) ரிப்பன் கட்டட மாமன்றக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.